**நாகொட பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

1. **நிதிக்கூற்றுக்கள்**

1.1 **நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 24 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் நாகொட பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமான நிலைமையினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 40,000 ஆன நூலகப் புத்தகங்கள் மூலதனமாக்கப்படாதிருந்ததுடன் முன்னைய ஆண்டுகளின் போது கைதவிர்க்கப்பட்டிருந்த ரூபா 23,535 ஆன நூலகப் புத்தகங்களின் கிரயம் சீராக்கப்பட்டு கணக்குகள் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 2,360,670 ஆன பங்களிப்புத் தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது நிறைவேற்றப்பட்ட நிர்மாண வேலைக்காக கிடைக்கப்பெற்ற ரூபா 171,413 ஆன தொகை நிலுவை வருமானக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 24,182,323 கூட்டுத்தொகையான 12 கணக்கு விடயங்களுக்குரிய அவற்றின் துணைப் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளில் காணப்படும் மீதி என்பவற்றுக்கிடையே ரூபா 8,325,670 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**1.3.3 தொங்கல் கணக்குகள்**

தொங்கல் கணக்குகளில் ரூபா 18,315 இற்கான செலவு மீதியினை இனங்கண்டு கணக்குகளில் சீராக்கம் செய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 19,320,774 கூட்டுத்தொகையான பெறவேண்டிய 07 மீதிகள் மற்றும் முன்கொண்டு வரப்பட்டுக் காணப்படும் நிலுவை வருமான கணக்கின் கூட்டுத்தொகை ரூபா 15,899,305 தொகையான மீதியை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) 2011 ஆம் ஆண்டு முதல் செலுத்த வேண்டிய ரூபா 1,017,297 முத்திரைக் கட்டணம் மற்றும் 2012 ஆம் ஆண்டு முதல் நிலவி வரும் ரூபா 1,968,246 ஆன பெறுமதி சேர் வரி வைப்புக்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 591,483 தொகையான பொது வழங்கல் கடன்கொடுத்தோர் மீதிகள், ரூபா 2,031,824 தொகையான ஏனைய கடன்கொடுத்தோர் மீதிகள், ரூபா 10,800 தொகையான வீட்டு வாடகை வைப்புக்கள், ரூபா 23,083 தொகையான ஏனைய பெறுவனவு மீதிகள் மற்றும் ரூபா 14,395,804 தொகையான அரச மானியக் கணக்கின் மீதி என்பவற்றைத் தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 83,789,965 கூட்டுத்தொகையான காணி மற்றும் கட்டிடங்கள், இயந்திரங்கள் மற்றும் இயந்திராதிகள், மோட்டார் வண்டிகள் மற்றும் வண்டில்கள், தளபாடங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக நாளதுவரையாக்கப்பட்ட சொத்துக்கள் அணிகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் ரூபா 1,810,086 கூட்டுத்தொகையான ஊழியர் கடன் தொடர்பான காலப்பகுப்பாய்வு போன்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது.

### 1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இனங்காமை

கீழே விபரிக்கப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) நிதிப்பிரமாணம் 102 முதல் 110 வரை | 2014 ஏப்ரல் 04 ஆந் திகதி நீர் பவுசருக்கு விபத்தினால் ஏற்பட்ட நட்டம் தொடர்பாக தொடர்புடைய பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 396(இ) | சபையின் இரண்டு வங்கிக் கணக்குகளுக்குரிய வழங்கப்பட்ட எனினும் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களைக் கடந்த ரூபா 132,161 தொகையான 32 காசோலைகள் தொடர்பாக தொடர்புடைய நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (iii) | நிதிப்பிரமாணம் 1645 மற்றும் 1646 | மீளாய்வாண்டின் போது சபைக்குரிய 18 வாகனங்களுக்காக நாளாந்த ஒட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த செயலாற்றல் பொழிப்பறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை |

## 2. நிதி மீளாய்வு

------------------------

### 2.1 நிதி விளைவு

------------------------

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது பிரதேச சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,444,034 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 676,866 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வண்டின் நிதி விளைவுகளில் ரூபா 3,120,900 ஆன அதிகரிப்பொன்று தென்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

------------------------------------------------------------

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் மீண்டுவரும் வருமானத்திற்கு ஒப்பாக மீண்டுவரும் செலவினத்தில் 11 சதவீத குறைவொன்று தென்பட்ட போதிலும், முன்னைய ஆண்டின் போது மீண்டுவரும் வருமானத்திற்கு ஒப்பாக மீண்டுவரும் செலவினம் 92 சதவீத உயர் பெறுமதியைக் கொண்டிருந்தது. அது நிதி முகாமைத்துவம் தொடர்பான திருப்திகரமான நிலைமையொன்றல்ல என்பது கணக்காய்வின் கருத்தாகும்.

(ஆ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு ஆகிய இரு ஆண்டுகளிலும் வருமானத்திற்கான உதவிகள், சுய உழைப்பு வருமானம் மற்றும் மீண்டுவரும் செலவினம் என்பவற்றினது விபரப் பொழிப்பு பின்வருமாறு,

| **ஆண்டு** | **மொத்த மீண்டுவரும் வருமானம்** | **வருவாய் உதவி மானியம்** | **சுய உற்பத்தி வருவாய்** | **மொத்த மீண்டுவரும் செலவினம்** | **சுய உழைப்பு வருவாயிலும் கூடிய மீண்டுவரும் செலவினம்** |
|---|---|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| 2015 | 31,861,898 | 20,363,166 | 11,498,732 | 29,417,863 | 17,919,131 |
| 2014 | 24,069,641 | 14,206,671 | 9,862,970 | 24,746,507 | 14,883,537 |
| 2013 | 18,147,285 | 10,326,428 | 7,820,857 | 21,777,292 | 13,956,435 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சகல ஆண்டுகளினதும் சபையின் வருமான உதவி பெறுவனவுகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு உள்ளதைப் போன்றே சுய உழைப்பு வருவாயிலும் நியாயமான அதிகரிப்பு தென்படுகின்றது.

(ii) மீண்டுவரும் செலவினம் தொடர்ச்சியான வேகத்துடன் அதிகரித்த போதும், ஒவ்வொரு ஆண்டிலும் சபையின் சுய வருமானமீட்டல் வருமானத்தை மிகைத்து மீண்டுவரும் செலவினம் குறிப்பிடத்தக்க விதத்தில் அதிகரித்திருந்தது.

(iii) சபைக்கு வருமான மானியங்கள் கிடைக்காதிருப்பின் சபையின் வருமானத்தின் மூலம் மீண்டுவரும் செலவினத்தை ஈடு செய்வதற்கு எதுவித வாய்ப்பும் இல்லாதிருந்தமை புலனாகியது. அது நிதி முகாமைத்துவம் தொடர்பான திருப்திகரமான நிலைமையொன்றல்ல.

(iv) வருமானத்தை அதிகரிப்பதற்கு சபையினால் கவனம் செலுத்தப்பட வேண்டுமெனவும், அதற்காக முறையான வேலைத்திட்டமொன்று தயாரித்து செயற்படுத்தப்பட வேண்டுமெனவும் அவ்வாறு இல்லாவிட்டால் சபையின் நிதி முகாமைத்துவத்தில் காணப்படும் பலவீனமான நிலைமை காரணமாக தொடர்ந்தியங்குதல் தொடர்பாக சிக்கலான நிலைமையொன்று உருவாகியுள்ளமை கணக்காய்வின் கருத்தாகும்.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 வீத வரி

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 134(1) மற்றும் (2) ஆம் உப பிரிவுகளின் பிரகாரம் உதவி ஆணையாளரின் அங்கீகாரத்துடன் முன்னேற்றப்பட்ட பகுதிகளைக் இனங்கண்டு வீத வரி அறவிடுவது தொடர்பில் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.3.2 ஏக்கர் வரி

மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை வரித் தொகை ரூபா 261,484 ஆக காணப்பட்டதுடன், அந் நிலுவை மீதியை அறவீடு செய்வதற்கு 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 158(1)(அ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.3.3 குத்தகை மற்றும் வீட்டு வாடகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்காக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 706,000 இற்கான குத்தகை வாடகையினை அறவிடுவதற்கு 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 159(1) இன் பிரகாரம் அறவிடுவதற்காக நடவடிக்கை எடுத்திருக்காமையால் மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை மீதி ரூபா 339,200 ஆக இருந்தது.

(ஆ) மாபாலாகம இரண்டு மாடி வியாபாரக் கட்டிடத் தொகுதியின் 04 கடைகள், மூன்று பழைய கடைகள் மற்றும் தல்கஸ்வெல பொது வியாபாரச் சந்தையின் மூன்று கடைகளும் உடன்படிக்கைகளை கைச்சாத்திடாமல் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன.

(இ) மாபலாகம இரண்டு மாடி வியாபாரக் கடை தொகுதியின் நில மாடியில் 05 கடைகளிலிருந்தும் மேல் மாடியின் 05 கடைகளிலிருந்தும் 04 பழைய கடைகளிலிருந்தும் 2016 பெப்ரவரி 02 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 308,550 ஆன வாடகை அறவிடப்பட வேண்டியுள்ளது.

(ஈ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரிய அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 12,545 தொகையான மூடுக்கு சங்ஹாரக்க வீட்டு வாடகை மீதியில் எவ்வித தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முத்திரைக் கட்டணங்களாக ரூபா 4,997,365 தொகையும் நீதிமன்றத் தண்டப் பணமாக 425,245 தொகை கிடைக்க வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல் மதிப்பீடு

மீளாய்வாண்டின் பாதீட்டில் காண்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட மூலதனச் செலவினம் மற்றும் மூலதனச் செலவினத்துடன் ஒப்பிடும் போது சபையின் ஒவ்வொரு நோக்கத்தையும் நிறைவேற்றுவதற்கான பாதிடப்பட்ட நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தும் போது பின்னடைவான நிலைமையொன்றில் இருந்தமை தென்பட்டதுடன் அது சபைக்கும் அதிகாரப் பிரதேசத்தின் மக்களுக்கும் ஏற்பட்ட நட்டமொன்றாகும்.

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் ஓய்வுபெற்ற மற்றும் சேவையிலிருந்து விலகிச் சென்ற 15 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 30,247 ஆன நிலுவை கடன் மீதிகளை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) பதவியணியினர் திட்டத்தின் பிரகாரம் சபையின் நிரந்தர பதவியணியின் பதவிகளில் காணப்படும் 09 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் மிகையான 20 பேருடனான பதவியணியனரை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையின் பெறுகை நடவடிக்கைகள் அலுவலக உதவியாளர் ஒருவராலும் காசோலை எழுதுதுல், ஊழியர் சேமாப நிதிய மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்துடன் தொடர்புடைய நடவடிக்கைகளை வெளிக்கள தொழிலாளர்களுக்கும் கையளிக்கப்பட்டிருந்தன.

### 3.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

சபையில் காணப்படும் வாகனங்களுக்கான எரிபொருள் கட்டளைகளின் மூலம் எரிபொருள் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல், தலைவரினால் மீளாய்வாண்டின் போது 3569 லீற்றர் எரிபொருள் கைக்காசுக்கு பெற்று சிட்டைகள் சமர்ப்பித்து ரூபா 347,777 தொகை ஒன்று சபை நிதியத்தில் இருந்து மீளளிப்பு செய்யப்பட்டிருந்தது.

### 3.4 செயற்பாட்டு திறமையின்மை

சபை அதிகாரப் பிரதேசத்தில் 02 செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்காக கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 80,000 தொகை அச்செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படாமல் நிர்மாண வேலைக் கணக்கில் வைத்திருக்கப்பட்டன.

### 3.5 திண்மக் கழிவு முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 ஆம் ஆண்டில் கழிவுப்பொருட்களை சேகரித்தல் மற்றும் சபையின் சேதனப் பசளை உற்பத்திக்காக 04 ஊழியர்களையும் சாரதி ஒருவரையும் சேவையில் ஈடுபடுத்தி அவர்களுக்கு சம்பளம் மற்றும் படிகள் செலுத்துவதற்காக ரூபா 1,776,730 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், ரூபா 51,452 தொகையான சேதனப் பசளை மாத்திரம் உற்பத்தி செய்யப்பட்டிருந்தது.

(ஆ) சேகரிக்கப்படுகின்ற உக்காத பொருட்களை அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் பிரிவின் பின்புறத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்தன.

(இ) சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளாமல் அதிகாரப் பிரதேசத்தில் கழிவுப்பொருள் சேகரிக்கப்பட்டிருந்த போதிலும், அப்பிரதேசங்களிலிருந்து வீதவரியை அறவிடுவதற்காக சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுகையும்

---

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

---

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் உள்ளடக்கிய 08 செலவின விடயங்களில் ரூபா 28,948,770 கூட்டுத்தொகையான சேமிப்பும் 07 வருமான விடயங்களில் இலக்கினை அடையாத ரூபா 29,229,350 வருவாயும் நிலவியதுடன், சுய வருமான ஈட்டலில் 30 சதவீதத்தை மூலதனச் செலவினத்திற்கு ஒதுக்கப்படாமை போன்ற காரணங்களால் வரவு, செலவுத்திட்டமானது ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படாதிருந்தது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

---

2014 பெப்ரவரி 24 ஆந் திகதிய தபபா/யஹ/01/நஆவே எனும் இலக்கமுடைய உள்ளூராட்சி ஆணையாளரது (தென்மாகாணம்) சுற்றறிக்கையின் பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. சபையினால் நியமிக்கப்பட்டிருந்த உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தருக்கு மீளாய்வாண்டின் போது சம்பளமும் படியுமாக ரூபா 422,848 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

---

2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(i) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களை அமைப்பதற்கு மீளாய்வாண்டு இறுதிவரை நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

### 4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

---

கீழே காணப்படும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

**(அ) பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

---

பெக்கோ இயந்திரம் 2011 ஆம் ஆண்டிலிருந்து விளைவற்றுக் காணப்பட்ட போதிலும், திருத்தம் செய்து ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு அல்லது கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் சிதைவடைந்து காணப்பட்டது.

**(ஆ) கையேற்கப்படாத சொத்துக்கள்**

---

சபையால் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்த 06 வாகனங்களது உரித்தைச் சபைக்கு கையேற்பதற்கு மீளாய்வாண்டு இறுதியளவிலும் சபை நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) வாகனக் கட்டுப்பாடு
(ஊ) மனித வள முகாமைத்துவம்